Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

CC.No. 73/2022

**2023-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 09-ம் தேதி திங்கள்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 4 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 4 | தொழில் | - | செல்போன் சர்வீஸ் கடை |
| பெயர் | - | பாரதிராஜா | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | மாரியப்பன் | சமயம் | - | இந்து |
| கிராமம் | - | கவர்க்கல் எஸ்டேட் | வயது | - | |
| சாதி | - | - | | | |

**09.10.2023**

**( 1, 2 எதிரிகள் ஆஜர்)**

**முதல் விசாரணை** :

1. நான் தற்போது சங்கரன் கோவிலில் சொந்தமான செல்போன் சர்வீஸ் கடை வைத்து நடத்தி வருகிறேன். தலநார் பிரிவில் உள்ள ஆர்.கே பிளாண்ட்டேசன் என்ற எஸ்டேட்டில் உள்ள ஒயில்ட் வுட் காட்டேஜ்ஜை 1-2-2020 அன்று காட்டேஜ்ஜை எனது அப்பா ஒரு வருட குத்தகைக்கு எடுத்திருந்தார். 1-வது எதிரியான ரெஜி சாரிடமிருந்து குத்தகைக்கு எடுத்திருந்தார்.

2. மார்ச் 2020-ல் கொரனா லாக்டவுன் என்பதால் அந்த காட்டேஜை மூடிவிட்டோம். இரவில் மட்டும் நானும் தம்பியும் போய் தங்கிவிட்டு வருவோம். அதன்பிறகு மேமாதத்திலிருந்து கரண்டு பில் கட்ட எந்த வருமானமும் இல்லை என்பதால் காட்டேஜ் குத்தகை வேண்டாம் என்று போனில் 1-வது எதிரியான ரெஜியிடம் சொல்லிவிட்டோம்.

3. வாட்டர்பால் உதவி ஆய்வாளர் பிரபாகரன் வந்து ரெஜி சாருக்கு சொந்தமான ஆர்.கே.பிளாண்டேசனில் இருந்த கட்டில், பீரோ, மெத்தை, பெயிண்ட், சேர் போன்ற பொருள் எல்லாம் காணோம் எடுத்தீர்களா என்று கேட்டார். நான் குத்தகைத்தான் எடுத்துள்ளேன் நைட், நைட்தான் போயிட்டுவருவேன் என்று சொன்னேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**:

1. 25-03-2020 முதல் 4-05-2020 வரை கொரனா ஊரடங்கு காலகட்டத்தில் எதிரிகள் இருவருரையும் நான் நேரடியாக பார்க்கவில்லை என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கில் என்னை போலீசார்

விசாரிப்பதற்கு முன்பு என்னை எதிரியாக சேர்த்திருந்தார் என்றால் சரிதான். எனக்கு முன்பாக ஷாஜு என்பவர் அந்த காடேஜ்ஜை மேற்பார்வை பார்த்துவந்தார் என்றால் சரிதான். ஒரு தீபக் ராஜமாணிக்கம் என்பவர் அதை நிர்வாகம் பண்ணி வந்தார்என்றால் சரிதான்.

2. 2-வது எதிரி பார்த்தீபன் காட்டேஜ்க்கு அருகில் இருப்பதால் யார் நிர்வாகம் செய்கிறார்களோ அவர்களுக்கு உதவியாக இருப்பார் என்றால் சரிதான். 1-வது எதிரிக்கு யாரு எல்லாம் உதவியாக இருக்கிறார்களோ அவர்கள் மீது இந்த வழக்கின் புகார்தாரர் ரவி மற்றும் அவர்களை சார்ந்தவர்கள் அவர்கள் மீது வழக்கு போட்டார்கள் என்றால் சரிதான்.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்)திரு.ரெ,செந்தில்குமார்
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை